P.R.NO.283

# செய்திக்குறிப்பு

Date:- 30-4-2020

தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்துடன் இணைந்த தஞ்சாவூர் வட்டம், புன்னைநல்லூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் உள்ள மூலஸ்தான அம்மன் புற்றுமண்ணாலானதால் அபிஷேகங்கள் செய்யப்படுவதில்லை. தைலக்காப்பு சாற்றப்படுகிறது. விஷ்ணு துர்க்கைக்கும், அம்பாள் உற்சவ மூர்த்திக்கும் நித்தியப்படி அபிஷேகம் நடைபெற்று வருகிறது.

மூலஸ்தான அம்பாளுக்கு 5 வருடத்திற்கு ஒருமுறை ஒரு மண்டலம் தைலக்காப்பு அபிஷேகம் நடைபெறுவது வழக்கத்தில் இருந்து வருகிறது. எனவே இவ்வாண்டு இத்திருக்கோயிலில் வருகிற 03.05.2020 முதல் 16.06.2020 வரை தைலாபிஷேகம் நடைபெற உள்ளது.

தற்போது கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை காரணமாக தமிழக அரசால் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் இத்திருக்கோயிலில் 03.05.2020 முதல் 16.06.2020 வரை நடைபெறும் தைலாபிஷேகத்திற்கு பக்தர்கள் யாரும் அனுமதிக்கப்படாமல் திருக்கோயிலில் நடைபெறவுள்ளதாக தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்தால் தெரிவிக்கப்பட்டது.